A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண்09 / 2023**

திரு R.கிரிநாத்,
s/o. ராமசந்திரன்,
தலைவர்,
ஸ்ரீ ரேணுகாதேவி மேல்நிலை பள்ளி,
நெய்காரப்பட்டி, பழனி தாலுக்கா,
திண்டுக்கல் மாவட்டம் – 624625.

………மேல்முறையீட்டாளர்
(திரு R.கிரிநாத்)

எதிர்

1. செயற்பொறியாளர் / பழனி,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், இரயில்வே ஃபீடர்,
பழனி – 624 601.

2. உதவி கணக்கு அலுவலர் / பழனி,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், இரயில்வே ஃபீடர்,
பழனி – 624 601.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு O.K. பிரகாஷ் பாபு, செயற்பொறியாளர் / பழனி
திரு P. பிரபு, உதவி கணக்கு அலுவலர்/ பழனி)

**மனு பெறப்பட்ட நாள்: 25-01-2023**

**கேட்புரை நாள்: 19-04-2023**

**ஆணை நாள்: 25 -04-2023**

25.01.2023 அன்று பெறப்பட்ட திரு R.கிரிநாத், s/o. ராமசந்திரன், தலைவர், ஸ்ரீ ரேணுகாதேவி மேல்நிலை பள்ளி , நெய்காரப்பட்டி, பழனி தாலுக்கா , திண்டுக்கல் மாவட்டம் – 624625 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 09/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது . மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 19.04.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை**

மின் இணைப்பு எண் 293–001–86–இன் மின் இணைப்பு பெயர் மாற்றம் மற்றும் சர்வே எண் மாற்ற உத்தரவுகளை ரத்து செய்யுமாறும் சர்வே எண் 31/4– ற்கே மின் இணைப் பு எண் 86–ஐ மாற்றம் செய்யுமாறும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 சர்வே எண் 31/4–இல் பொது பாத்தியம் உள்ள கிணற்றில் உள்ள மின் இணைப்பு எண் 293–001–86–ஐ பெயர் மாற்றம் மற்றும் இடமாற்றம் குறித்தும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மின் இணைப்பு பெயர் மாற்றம் மற்றும் இடமாற்றத்தின் போது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலேயே அனு மதி அளிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, மின் இணைப்பு எண் 293–001–86–ஐ பெயர் மாற்றம் மற்றும் இடமாற்றம் குறித்து மேல்முறையீட்டாளர் திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 30.05.2022 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் , திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம் 31.12.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது . மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம் , மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 31.12.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது . அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*பத்தி 11.0 ல் உள்ள தீர்வின்படி மின் இணைப்பு எண் 86-ஐ பெயர் மாற்றம் மற்றும் புல எண் மாற்றம் செய்த பொழுது அன்றைய வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளது. மேலும் பெயர் மாற்றத்தின் போது பெறப்பட்ட ஆவணங்கள் அன்றைய தேதியில் செல்லத்தக்க ஆவணங்களாகவே கருதப்படுகிறது. மேலும் போலி ஆவணங்கள் பெறப்பட்டு விவசாய மின் இணைப்பு எண்,86 யை பெயர் மாற்றம் மற்றும் புல எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் புகாரை விசாரணை செய்து ஆணை வழங்கும் அதிகாரம் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு இல்லை. மேலும் புல எண்.31/4-ல் உள்ள கூட்டு உரிமைதாரராகிய திருமதி முத்துலட்சுமி அவர்கள் பழனி வட்டாட்சியர் மற்றும் திரு. R.கிரிநாத் எதிராக மேல் முறையீடு வழக்கு தாக்கல் செய்து சொத்துரிமை சம்பந்தமாக வழக்கு விசாரணை கோட்டாச்சியர் பழனி அவர்களிடம் நிலுவையில் உள்ளதால் மனுதாரரின் கோரிக்கை சம்பந்தமாக இம்மன்றத்தால் தீர்வு காண இயலாது. எனவே முறையீட்டாளரின் இம்மனு இம்மன்றத்தால் தள்ளுபடி செய்யப்படுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 19.04.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு R.கிரிநாத் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு O.K. பிரகாஷ் பாபு , செயற்பொறியாளர் / பழனி மற்றும் திரு P. பிரபு, உதவி கணக்கு அலுவலர் /பழனி, திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்ம ன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது . குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள் , குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம் பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>

5.1 மனுதாரர் திரு.R.கிரிநாத் மற்றும் 1.(லேட்) சுப்புராயலு மனைவி S.முத்தம்மாள், 2.(லேட்) சுப்புராயலு மகன் S. குப்புச்சாமி 3.(லேட்) சுப்புராயலு மகள் S.லதா ஆகியோருக்கு கூட்டு பாத்தியப்பட்ட பழனி வட்டம் , நெய்க்காரப்பட்டி கிராமம், சர்வே எண் 31/4 ஏ0 செ 11-ல் இந்த மனுதாரருக்கு பொதுவில் பாத்தியம் உள்ள கிணற்றில் உள்ள மின் இணைப்பு எண் 86 மற்றும் மோட்டாரிலும் P.R. வேலப்ப நாயக்கர் மற்றும் பார்ட்டி(Party) பெயரில் இருந்த மின் இணைப்பை உண்மைக்குப் புறம்பான வருவாய் ஆவணங்கள் மூலம் 1-ம் எதிர்மனுதாரர் பெயரில் பெயர் மாற்றம் செய்து 1-ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மேற்படி கிராமம் சர்வே எண் 56/1 ல் உள்ள கிணற்றுக்கு shift செய்துள்ளது சம்பந்தமாக தாவா ஆகும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 தாவா சொத்துக்களும் இன்னம் வேற சொத்துக்களும் ஆதியில் ராமசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டு இருந்த து. ராமசாமி நாயக்கர் இறப்பிற்கு பி றகு அவரது மக்களான வேலப்ப நாயக்கர் , குருசாமி நாயக்கர் அவர்களது மக்களுடன் பொதுக்

குடும்பச் சொத்துக்களை 09/07/1972 ம் நாள் ஆவண எண் 2013, 1972 ன் படி பாகப் பிரிவினை செய்து கொண்டதில் சர்வே எண் 31/4 ஏ 0 செ 11– சர்வே எண் 31/5 ஏக்கர் 0 செ 4 மொத்தம் ஏக்கர் 0 செ 15–ம் அதில் உள்ள கிணறு, மின் மோட்டார் பம்பு செட், மின் இணைப்பு எண் .86 (PR வேலப்ப நாயக்கர் & பார்ட்டி ) முதலானவைகள் பொதுவில் பாதி உரிமையும் எமது கட்சிக்காரரின் தகப்பனார் R.ராமச்சந்திரனுக்கு C செடியூல் பாகமாக ஒதுக்கப்பட்டு அவரால் அனுபவித்து வரப்பட்ட தாகவும், பாகப்பிரிவினைக்கு முன்பே குடும்பத்தில் மூத்த உறுப்பினர் என்ற முறையில் வேலப்ப நாயக்கர் பெயரில் (PR வேலப்ப நாயக்கர் & பார்ட்டி) மின் இணைப்பு பெறப்பட்டதாகவும், பின்னிட்டு கடந்த 09.07.1972 ஆம் தேதிய பாகப்பிரிவினையில் மேற்படி சொத்து மற்றும் மின் இணைப்பு வேலப்ப நாயக்கரின் சகோதரர் குருசாமி நாயக்கரின் வாரிசான மனுதாரரின் தகப்பனார் ராமச்சந்திரன் பெயருக்கு ஒதுக்கப்பட்டதாகவும், ஆனால் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யாமல் ராமச்சந்திரன் அனுபவித்து வந் ததாகவும், வேலப்ப நாயக்கர் வாரிசுகளுக்கு அறிவிப்புச் சொத்து மற்றும் மின் இணைப்பில் எவ்வித உரிமையும் சம்மந்தமும் இல்லை எனவும் , மேற்படி வேலப்ப நாயக்கரின் மகன் கிருஷ்ணசாமி எனவும், மேற்படி கிருஷ்ணசாமியின் மகன்கள் இந்த 4, 5 எதிர்மனுதாரர்கள் ஆவார்கள் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 ஆர்.ராமச்சந்ரன், தான் அனுபவித்து வந்த சொத்துக்களை அக்குத்தாயம்மாளுக்கு 25.09.1980 ஆம் நாள் ஆவண எண் 1365 ன்படி கிரையம் செய்து சுவாதீனம் ஒப்படைத் ததாகவும், அதன் பின்பு அக்குத்தாயம்மாள் தனது மகளான விஜயம்மாளுக்கு 17.07.1991 ஆவண எண் 817, 1991–ன்படி செட்டில்மெண்ட் மூலம் உரிமைபடுத்தி வைத்தார் . அதன்படி விஜயம்மாள் அறிவிப்புச் சொத்துக்களை உரிமை அடைந்து அனுபவித்து வந் ததாகவும், விஜயம்மாள் தான் அனுபவித்து வந்த சொத்துக்களை பொறுத்து எவ்வித ஏற்பாடுகளும் செய்து வைக்காமல் 12.06.1999 ம் நாள் இறந்துவிட்டதாகவும், அவரது இறப்பிற்கு பின்பு அவரது மகனும் , மனுதாரரின் தகப்பனாருமான ஆர் .ராமச்சந்திரன் உரிமை அடைந்து அனுபவித்து வந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 ஆர்.ராமச்சந்திரன் கடந்த 28.12.2005 ஆம் நாள் இறந்துவிட்டதாகவும், அவரது இறப்பிற்கு பின்பு அவரது மக்களான மனுதாரரும் அவரது தாயார் ரஞ்சிதம் மற் றும் சகோதரியான பிருந்தா ஆகியோர்கள் சட்டப்படி வாரிசுதாரர்களாக உரிமை அடைந்து அனுபவித்து வந்து 06/01/2006 ம் நாள் ஆவண என் 37/2006 ன்படி பாகப்பிரிவினை செய்து கொண்டு அனுபவித்து வந் ததாகவும், மேற்படி பாகப்பிரிவினையில் அறிவிப்புச் சொத்து மற்றும் மின் இணைப்பு மனுதா ரர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு மனுதாரர் சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேற்படி சர்வே எண் 31/4 ல் உள்ள கிணற்றில் பொதுவில் பாதி உரிமை மட்டுமே 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் அவர்களுக்கு உரிமைப்பட்ட சொத்துக்களுடன் மனுதாரருக்கு உரிமைப்பட்ட ½ பாகமான சர்வே எண் 31/4 மற்றும் 31/5 சொத்துக்களையும் சேர்த்து பட்டா எண் 864 பெற்றும், அவ்வாறு மோசடியாக பெறப்பட்ட வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் சர்வே எண் 31/4 ல் உள்ள பொதுக் கிணற்றில் உள்ள மின் இணைப்பு எண் 86–யை 6, 7 எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரர் முத்து லட்சுமி பெயருக்கு பெயர் மாற்றம் செய்து 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு தனித்து உரிமைப்பட்ட சர்வே எண் 56/1 ல் உள்ள கிணற்றிற்கு 8 ம் எதிர்மனுதாரரின் அனுமதியின்படி செய்துள்ளார்கள் . கடந்த 30/3/1999 ம் தேதிய அடமானக் கடன் பத்திரத் தில் 2, 3 எதிர்மனுதாரர்கள் மற்றும் அவர்களின் தகப்பனார் சுப்புராயலு அவர்களுக்கு சர்வே எண் 31/4 ல் ஹெக் 0.02.5 விஸ்தீரணம் உள்ள கிணற்றிலும் 5 ஹெச் பி மின் மோட்டார் மற்றும் பம்புசெட் அவர்களுக்குண்டான பகுதி பாகத்தை மட்டுமே ஈடு காட்டி பழனி கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் கடன் பெற்றுள் ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மனுதாரர் அவருக்கு பொதுவில் பாதி பாத்தியப்பட்ட சர்வே எண் 31/4 , 31/5–க்கான வருவாய் துறை ஆவணமான கூட்டுப்பட்டாவின் நகல் பெற்று சரி பார்த்த பொழுது தான் சர்வே எண் 31/4 ல் பொதுவில் பாதி உரிமையுடைய மனுதாரரின் பெயரை நீக்கம் செய்து பட்டா எண் 864 மோசடியாக 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்

பெயரில் வழங்கியிருப்பது தெரிய வந்த தாகவும், அதன்பின்பு மனுதாரர் அவருக்கு பாத்தியப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் வருவாய் துறையினருக்கு மனுச் செய்து சர்வே எண் 31/4 ல் மனுதாரர் மற்றும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் பெயரில் கூட்டுபட்டா எண் 1141 பெற்றுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் சர்வே எண் 31/4 ல் மின் இணைப்பு எண் 86 ல் உள்ள மின் இணைப்பை கூட்டு உரிமையாளரான மனுதாரரின் அனுமதி பெறாமலும் மேற்படி கிணற்றிற்கு எவ்வித உரிமை இல்லாத 4, 5 எதிர்மனுதாரர்களிடம் ஆட்சேபணையின்மை பெற்றதாக பொய்யான ஆவணங்களை உற்பத்தி செய்து அதன் அடிப்படையில் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் அவர்களுக்கு உரிமைப்பட்ட சர்வே எண் 56/1–ல் உள்ள கிணற்றிற்கு 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் மின் இணைப்பு shift செய்யப்பட்டுள்ளதாகவும், அவ்விதம் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மோசடியாக பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் மின் இணைப்பு எண் 86–ஐ shift செய்தது சட்டப்படி சரியல்ல என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மின் இணைப்பை shift செய்ததை அறிந்த மனுதாரர் வருவாய்துறையில் உரிய நடவடிக்கை எடுத்து மனுதாரர் மற்றும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் பெயருக்கு கூட்டுப்பட்டா பெற்ற பின்பு 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் அலுவலகத்தில் நேரிடையாக ஆட்சேபணை மனு கொடுத்தும் பின் னிட்டு தனது வழக்கறிஞர் மூலம் ஏற்கனவே இந்த மனுதாரர் கடந்த 18/02/2022 ம் தேதி அறிவுப்பு 1 முதல் 3 மற்றும் 6 முதல் 8 எதிர்மனுதாரர்களுக்கு அறிவுப்பு அனுப்பி அதை எதிர்மனுதாரர்கள் பெற்றுக் கொண்டுள்ளதாகவும், மேற்படி அறிவுப்பிற்கு 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் பொய்யான தகவல் கூறி கடந்த 24/02/2022 ம் தேதி பதில் அறி விப்பு கொடு த்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 ஆகையால் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு உரிமைப்பட்ட சர்வே எண் 56/1 ல் 1ம் எதிர்மனுதாரர் முத்துலட்சுமி பெயரில் வழங்கப்பட்ட மின் இணைப்பு எண் 86–ஐ 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் மனுதாரர் மற்றும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு கூட்டு பாத்தியப்பட்ட சர்வே எண் 31/4 ல் உள்ள கிணற்றிற்கு மீண்டும் மாற்றி

கொடுக்க Restore உத்திரவிட வேண்டியது அவசியமும் நியாயமும் இருக்கின்றதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் திண்டுகல்லில் கடந்த 28.02.2022 அன்று மனு செய்து மேற்படி மனு 13/2022 என்ற எண்ணாகி அதில் 31.12.2022 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி உத்தரவினை எதிர்த்து தான் சென்னை மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு மேல்முறையீடு தாக்கல் செய்து மேற்படி மேல்முறையீட்டு மனு 09/2023 என எண்ணாகி நிலுவையில் உள்ளதாகவும், கீழமை மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு பின்னிட்டு பழனி வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் ந.க.எண் 6800/2022/அ1 நாள் 10.02.2023 இல் தனக்கு சாதகமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 தாவா சொத்து மற்றும் சில இணைப்பைப் பொருத்து முத்தம்மாள், குப்புசாமி மற்றும் லதா கொடுத்த பட்டா மாறுதல் மனு தள்ளுபடி செய்யப்பட்டு, மேற்படி உத்தரவு கோட்டாட்சியர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி கோட்டாட்சியரின் உத்தாவின் அடிப்படையிலும் 1 ஆம் எதிர் மனுதாரரான முத்துலட்சுமி கொடுந்த இழப்பெதிர் காப்பு பத்திரத்தின் (INDEMNITY BOND) அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுத்து நெய்க்காரபட்டி கிராமம் சர்வே எண். 56/1 இல் உள்ள கிணற்றிற்கு முத்துலட்சுமி பெயரிலுள்ள மின் இணைப்பை ஷிப்ட் செய்திருப்பதை இரத்து செய்து தாவா மின் இ ணைப்பு எண் 86 ஐ திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் நெய்க்காரபட்டி கிராம சர்வே எண். 31/4 ஏர் 0.11 செண்டில் பொதுவில் பாதி பாத்தியமுள்ள கிணற்றிற்கு மேற்படி மின் இணைப்பை ரீஸ்டோர் செய்து கொடுக்க வேண்டும் என மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>

6.1 மனுதாரர் வழங்கிய கூடுதல் ஆவணமான பெயர் இணைக்கப்பெற்ற சொத்துரிமை ஆவணம் தொடர்பான வழக்கு கோட்டாட்சியர், பழனி அவர்களிடம் நிலுவையில் இருந்ததினால் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை எனவும், சொத்துரிமை

தொடர்பான விசாரனை கோட்டாட்சியர் பழனி, அவர்களின் உத்திரவு அறிக்கை நடைமுறை நிறைவடையாததால் மனுதாருக்கு சாதகமான முடிவு எடுக்கப்படவில்லை எனவும், மனுதாரர் வழங்கிய அனைத்து ஆவணங்களும் சொத்துரிமை தொடர்பான கோட்டாட்சியர், பழனி அவர்களின் முன்னிலையில் உள்ள வழக்கையும் கவனமாக கணக்கில் கொள்ளப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் கேட்புரை நடைபெற்ற 24.11.2022 அன்றும் மற்றும் தீர்ப்புரை வழங்கப்பட்ட 31.12.2022 வரை கோட்டாட்சியர், பழனி அவர்களால் சொத்துரிமை தொடர்பான உத்திரவு வழங்கப்படவில்லை எனவும் கோட்டாட்சியர் பழனி அவர்களின் உத்திரவு 10.02.2023 அன்று தான் வழங்கப்பட்டுள்ளதாகவும், சொத்துரிமை தொடர்பான வழக்கு கோட்டாச்சியர் பழனி அவர்களின் முன்னிலையில் இருந்ததனால் அதனை கணக்கில் கொள்ள இயலவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மின் இணைப்பின் மீது உரிமை இல்லாவிடினும் கூட்டு பட்டாவில் உள்ளவர்களின் ஆட்சேபனை இல்லாத சான்று, பெயர் மாற்ற மனுவும் மனுதாரரால் வழங்கப்பட்டதாகவும், சொத்துரிமை மீது ஏற்படும் மாற்றங்களை கூட்டு பட்டாதாரர்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே ஆட்சேபனை இல்லா சான்று பெறப்பட்டதாகவும், பெயர் மாற்றம் மற்றும் இடமாற்றம் செய்யப்பட்ட போது மனுதாரரின் பெயரானது வருவாய் ஆவணங்களில் இல்லாததாலும் பின்னர் மனுதாரரால் வழங்கப்பட்ட சொத்துரிமை ஆவணங்கள் மீதான வழக்கு கோட்டாச்சியர் பழனி அவர்களின் முன்னிலையில் நிலுவையில் இருந்ததாலும் மனுதாரரின் கோரிக்கை ஏற்க இயலாமல் தள்ளுபடி செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மனு தொடர்பான இறுதி முடிவின் போது மனுதாரரின் கோரிக்கை ஏற்கப்பட்டால் எதிர்மனுதாரர் – 1 ஆல் வழங்கப்பட்ட (Indeminity) இழப்பெதிர்காப்பு பத்திரத்தின் படி முடிவுகள் மேற்கொள்ளப்படும் எனவும், சொத்துரிமை தொடர்பான வழக்கு கோட்டாச்சியர், பழனி அவர்களின் உத்திரவு வழங்கப்படாமல் இருந்ததினால்

இழப்பெதிர்காப்பினை அமுல்படுத்த இயலவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மனுதாரர் மின் நுகர்வோர் குறைதீர்மன்றத்தில் மனுசெய்த நாளான 30.05.2022–க்கு முன்பே கோட்டாச்சியர் பழனி அவர்களின் முன்னிலையில் இது தொடர்பான மனு 20.05.2022 முதல் நிலுவையில் இருந்து வருவதால் மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் இறுதி முடிவு எடுக்க முடியாததன் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் வழிகாட்டுதல்படி மின் இணைப்பின் பெயர் மாற்ற மனுவின் மீது வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையிலேயே விசாரணை மேற்கொள்ளப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 10.02.2023 அன்று சொத்துரிமை தொடர்பான விசாரணை உத்திரவு கோட்டாட்சியர் பழனி அவர்களால் வழங்கப்பட்டுள்ள சூழ்நிலையில் மனுதாரர் இவ்வலுவலகத்தை நிவாரணம் வேண்டி அணுகினால் உரிய மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்கின்ற விபரம் கடிதம் வாயிலாக திரு. கிரிநாத் அவர்களுக்கு இவ்வலுவலக கடித நாள் 03.03.2023 மூலம் தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 அதன் தொடர்ச்சியாக திரு கிரிநாத் அவர்கள் மின் இணைப்பு எண் 293– 001–86–இன் பெயர் மாற்றத்தினை கோட்டாட்சியர், பழனி அவாகளால் வழங்கப்பட்ட உத்திரவு மற்றும் திருமதி.முத்துலட்சுமி அவர்களால் பெயர் மாற்றத்தின்போது வழங்கப்பட்ட இழப்பெதிர் காப்பு பத்திரத்தின் அடிப்படையில் இரத்து செய்து தரவேண்டுமாய் தனது 09.03.2023 நாளிட்ட தபால் மூலம் விண்ணப்பித்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 இதன் தொடர்ச்சியாக திருமதி.முத்துலட்சுமி அவர்களுக்கு மின்இணைப்பு எண் 293–001–86 க்கு வழங்கப்பட்ட பெயர் மாற்றம் மற்றும் இடம் மாற்றத்தினை ஏன்

இரத்து செய்யக்கூடாது என அறிவிப்பு கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ள தாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார் . மேலும், தற்சமயம் மேல்முறையீட்டாளருக்கு எதிராக திருமதி.S.முத்துலட்சுமி அவர்கள் மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்து விசாரணை மாவட்ட வருவாய் அலுவலர் திண்டுக்கல் அவர்களிடம் நிலுவையில் உள்ள காரணத்தால் மேற்கண்ட மின்இணைப்பு தொடர்பாக மாற்று நடவடிக்கை எதுவும் எடுக்க இயலாது எனவும் தற்போதைய நிலையே தொடர்ந்து இருக்க வேண்டும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு.R.கிரிநாத் மற்றும் 1. ( லேட்) சுப்புராயலு மனை வி S.முத்தம்மாள் (எ) முத்துலட்சுமி, 2. (லேட்) சுப்புராயலு மகன் S. குப்புச்சாமி 3. (லேட்) சுப்புராயலு மகள் S.லதா ஆகி யோருக்கு கூட்டு பாத்தியப்பட்ட பழனி வட்டம் , நெய்க்காரப்பட்டி கிராமம் , சர்வே எண் 31/4 ஏ0 செ 11–ல் இந்த மனுதார ருக்கு பொதுவில் பாத்தியம் உள்ள கிணற்றில் உள்ள மின் இணை ப்பு எண் 86 மற்றும் மோட்டார் P.R. வேலப்ப நாயக்கர் மற்றும் பார்ட்டி என்ற பெயரில் இருந்ததாகவும் அந்த மின் இணைப்பை உண்மைக்குப் புறம்பான வருவாய் ஆவணங்கள் மூலம் (லேட்) சுப்புராயலு மனை வி S.முத்தம்மாள் பெயரில் பெயர் மாற்றம் செய்ததாகவும் மேலும் அவருக்கு பாத்தியப்பட்ட மேற்படி கிராமம் சர்வே எண் 56/1 ல் உள்ள கிணற்றுக்கு இடமாற்றம் செய்துள்ளதாகவும் அவ்வாறு பெயர்மாற்றம் மற்றும் இடமாற்றம் செய்யப்பட்ட மின் இணைப்பு எண் .86–ஐ மீண்டும் சர்வே எண் .31/4ல் பொது பாத்தியபட்ட கிணற்றுக்கு பழைய நிலையிலேயே மாற்றி தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

7.3 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையை திருமதி .S.முத்துலட்சுமி, க/பெ.(லேட்) சுப்புராயலு என்பார் நெய்க்காரப்பட்டி கிராமம் , சர்வே.எண்.31/4–ல் வேலப்பநாயக்கர் பாட்டி எனும் பெயரிலிருந்து வந்த விவசாய மின் இணைப்பினை (293–001–86/5HP) தமது பெயருக்கு உரிய வருவாய் ஆவணங்களுடனு ம் வாரிசு

சான்றிதழுடனும் பெயர் மாற்றம் அனுமதி கோரி கடந்த 25.06.2019 அன்று மனு அளித்ததன் பேரில் அவ்விண்ணப்பம் பரிசீலினை செய்யப்பட்டு , பெயர் மாற்ற அனுமதி வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 மேலும் மேற்கண்ட மின் இணைப்பு உள்ள கிணற்றில் போதுமான நீர்வளம் இல்லாத காரணத்தால் மேற்கண்ட மின் இணைப்பை சர்வே எண் .31/4ல் இருந்து திருமதி.S.முத்துலட்சுமிக்கு சொந்தமான மற்றொரு சர்வே .எண்.56/1ல் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு இடமாற்றம் வேண்டி அனுமதி பேரில் DCW விண்ணப்பத்தினை உரிய வருவாய் ஆவணங்களுடன் அளித்து அதற்குரிய மதிப்பீட்டு தொகையை செலுத்தியதன் காரணமாக 10.08.2020 அன்று மின் இணைப்பு இடம் மாற்றம் செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேற்படி சர்வே எண் .31/4ல் உள்ள கிணற்றில் பொதுவில் பாதி உரிமை மட்டுமே கொண்ட திருமதி .S.முத்துலட்சுமி அவர்கள் அவர்களுக்கு உரிமைப்பட்ட சொத்துக்களுடன் மேல்முறையீட்டாளருக்கு உரிமைப் பட்ட ½ பாகமான சர்வே எண்.31/4 மற்றும் 31/5 சொத்துக்களையும் சேர்த்து பட் டா எண்.864 பெற்றதாகவும் அவ்வாறு மோசடியாக பெறப்பட்ட வருவாய் ஆவணங்களின் அடிப்படையிலேயே மேற்கூறிய மின் இணைப்பின் பெயர் மாற்றம் மற்று ம் இடமாற்றம் செய்யப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.6 திருமதி.S.முத்துலட்சுமி அவர்கள் சம்பந்தப்பட்ட மின் இணைப்பின் மீது பெயர் மாற்றம் மற்றும் இட மாற்றம் அனுமதி வேண்டி அளித்திருந்த வருவாய் ஆவணங்கள் மோசடியான முறையில் பெற்று சமர்ப்பிக்கப்பட்டவை என்பது குறித்து எந்த வித முன் தகவலும் தங்கள் அலுவலகத்தில் முன்கூட்டியே கிடைக்கப்பெறவில்லை எனவும் எனவே வாரிய தரப்பில் மேற்படி வருவாய் ஆவணங்களின் உண்மை தன்மையை கண்டறிவதற்கும் நிரூப ணம் செய்வதற்கும் அவசியம் ஏற்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேல்முறையீட்டாளர் அவருக்கு பொதுவில் பாதி பாத்தியப்பட்ட சர்வே எண்.31/4, 31/5 க்கான வருவாய்துறை ஆவணமான கூட்டுப் பட்டாவின் நகல் பெற்று

சரிபார்த்தபொழுதுதான் சர்வே எண் .31/4ல் பொதுவில் பாதி உரிமையுடைய மேல்முறையீட்டாளரின் பெயரை நீக்கம் செய்து பட்டா எண் .864 மோசடியாக பெறப்பட்டது தெரியவந்ததாகவும் அதன் பிறகு மேல்முறையீட்டாளர் அவருக்கு பாத்தியப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் வருவாய்த்துறையினருக்கு மனு செய்து சர்வே எண்.31/4ல் மேல்முறையீட்டாளர் மற்றும் 1. (லேட்) சுப்புராயலு மனைவி S.முத்தம்மாள், 2. (லேட்) சுப்புராயலு மகன் S. குப்புச்சாமி 3. (லேட்) சுப்புராயலு மகள் S.லதா பெயரில் கூட்டு பட்டா எண் .1141 பெற்றதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.8 இதனை தொடர்ந்து சர்வே எண்.31/4ல் நடப்பு வருவாய் ஆவணங்கள் வேண்டி திருமதி.S.சுப்புலட்சுமி அவர்களுக்கு தெரிவிக்கப்பட்ட நிலையில் அவ ர்கள் பழனி வட்டாசியரிடம் 01.11.2021 அன்று பட்டா எண் .1141ன் கீழ் (சர்வே.எண்.31/4) மேல்முறையீட்டாளரின் பெயரை இணைத்து பட்டா மாறுதல் செய்து பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு பழனி வருவாய் கோட்டா ட்சியர் முன்பு மேல்முறையீடு வழக்கு தாக்கல் செ ய்ததாகவும் கூட்டு உரிமைதாரராகிய திருமதி.S.முத்துலட்சுமி அவர்கள் பழனி வட்டாச்சியர் மற்றும் மேல்முறையீட்டாளருக்கு எதிராக மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்து சொத்துரிமை சம்பந்தமாக வழக்கு விசாரணை கோட்டா ட்சியர் பழனி அவர்களிடம் நிலுவையில் இருந்த காரணத்தினால் மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் இறுதி முடிவு எடுக்க முடியவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்

7.9 இந்நிலையில் மேற்கூறிய வழக்கு சம்பந்தமாக பழனி வருவாய் கோட்டாட்யர் கடந்த 10.02.2023 அன்று மேல்முறையீட்டாளருக்கு சாதமாக தீர்ப்பு வழுங்கப்பட்ட நிலையில் மேல்முறையீ ட்டாளர் மின் இணைப்பு எண் .293–001–86ன் பெயர் மாற்றத்தினை பழனி கோட்டாட்சியர் அவர்களால் வழுங்கப்பட்ட உத்தரவு மற்றும் திருமதி.S.முத்துலட்சுமி அவர்களால் பெயர் மாற்றத்தின் போது வழங்கப்பட்ட இழப்பெதிர் காப்பு பத்திரத்தின் அடிப்படையில் ரத்து செய்து மீண்டும் பழைய நிலைமைக்கு கொண்டு செல்ல கோரி விண்ணப்பி த்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.10 இதன் அடிப்படையில் எதிர்மனுதாரர் கூட்டு உரிமையாளரான மேல்முறையீட்டாளரின் கோரிக்கையின் படி 25.06.2019 நாளிட்ட மின் இணைப்பு எண்.86–க்கான பெயர் மாற்றத்தினை ஏன் ரத்து செய்ய கூடாது எ ன்பதற்கான தகுந்த வருவாய் / பதிவுத்துறை ஆவணங்களை சமர்ப்பிக்குமாறும் தவறும் பட்சத்தில் அக்கடிதமே அறிவிப்பாக கருதி பெயர் மாற்றத்தின் போது அவர்களால் வழங்கப்பட்ட இழப்பெதிர் காப்பு பத்திரத்தின் படி மின் இணைப்பு 86–க்கு வழங்கப்பட்ட பெயர் மாற்ற மற்றும் இடமாற்ற உத் தரவு ரத்து செய்யப்படும் என திருமதி .S.முத்துலட்சுமி அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.11 மேலும், தற்சமயம் மேல்முறையீட்டாளருக்கு எதிராக திருமதி.S.முத்துலட்சுமி அவர்கள் மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்து விசாரணை மாவட்ட வருவாய் அலுவலர் திண்டுக்கல் அவர்களிடம் நிலுவையில் உள்ள காரணத்தால் மேற்கண்ட மின்இணைப்பு தொடர்பாக மாற்று நடவடிக்கை எதுவும் எடுக்க இயலாது எனவும் தற்போதைய நிலையே தொடர்ந்து இருக்க வேண்டும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.12 கேட்புரையின் போது மேல்முறையீட்டாளரிடம் சர்வே எண் 31/4–இல் உள்ள மின் இணைப்பு எண் 86–ஐ திருமதி.S.முத்துலட்சுமி அவர்கள் 25.06.2019 அன்று பெயர் மாற்றம் மற்றும் இடமாற்றம் செய்யப்பட்ட போது ஏதாவது ஆட்சேபனை தெரிவித்தாரா என்று வினவிய போது மேல்முறையீட்டாளர் இல்லை என்று தெரிவித்துள்ளார். மேலும், மின் இணைப்பு எண் 86–ஐ சர்வே எண் 31/4–லிருந்து சர்வே எண் 56/1–இல் 10.08.2020–இல் இடமாற்றம் செய்யப்பட்ட போது ஆட்சேபனை தெரிவித்தாரா என்று வினவியபோதும் மேல்முறையீட்டாளர் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

7.13 மேலும், மேல்முறையீட்டாளருக்கு பழனி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் 10.02.2023 அன்று பிறப்பித்த உத்தரவில் கூட்டு பட்டாவில் மேல்முறையீட்டாளரின் பெயரை சேர்ப்பதற்குண்டான உத்தரவு மட்டுமே பிறப்பிக்கப்பட்டுள்ளது . அதில் மின் இணைப்பு குறித்து ஏதும் கூறப்படவில்லை எனவும் , மின் இணைப்பு பெயர் மாற்றம் மற்றும் இடமாற்றம் செய்யப்பட்ட போது வாரியத்தால் பெறப்பட்ட ஆவணங்களில் மேல்முறையீட்டாளரின் பெயர் இருந்ததற்கான எந்தவொரு ஆதாரமு ம் இல்லை

என்பதாலும் அச்சமயம் பெறப்பட்ட ஆவணங்கள் அன்றைய தேதியில் செல்லத்தக்க ஆவணங்களாக இருந்ததாலும் எதிர்மனுதாரர் தரப்பில் பெயர் மாற்றம் மற்றும் இடமாற்றம் நடந்த காலத்தில் எதிர்மனுதாரரின் செயல்பாட்டில் எந்தவித தவறும் இல்லை என்பது தெரியவருகிறது.

7.14 இந்நிலையில் திருமதி .S.முத்துலட்சுமி அவர்கள் , பழனி வருவாய் கோட்டாட்சியர் அவர்க ள் 10.02.2023 அன்று பட்டாவில் மேல்முறையீட்டாளரின் பெயர் இணைப்பு செய்து பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாக எதிர்மனுதாரர் கூடுதல் ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார் . அதில் மேல்முறையீட்டாளரின் பெயரை பட்டாவில் இணைத்தது சம்பந்தமாக மாவட்ட வருவாய் அலுவலர் திண்டுக்கல் அவர்களிடம் மேல்முறையீடு மனு 745889/2023 ஆக பதிவாகியுள்ளது தெரிய வருகிறது.

7.15 ஆகவே, இது சம்பந்தமாக நான் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 17(4)–ஐ ஆராய விரும்புகிறேன், மேற்கண்ட விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"XXX XXX XXX*

*17 (4) கீழ்க்குறிப்பிட்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும் , மின்சாரகுறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*

*அ) முறையீட்டாளர் மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன் , முறையீட்டில் குறிப்பிட்ட உரிமதாரர் , குறைகளை மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்திருந்து அந்த முறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும் . அல்லது முறையீடு பதிவு செய்த ஐம்பது நாட்களுக்குள் ப தில் பெறப்படாமல் இருந்திருக்கவேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்திஏற்படாமல் இருந்திருக்க வேண்டும் . பிரிவு: 17(1) இல் விவரிக்கப்பட்டுள்ள பொதுத்தன்மையான முறையீட்டிற்கு இது பொருந்தாது.*

*ஆ) முறையீடு, முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன் று மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*இ) பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும் . மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல் பொருள் (subject matter ) கொண்ட முறையீடு , அதே முறையீட்டாளரிடமிருந் து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையிட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*ஈ) முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ , அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது.*

*உ) முறையீடு அற்பமானதாகவும் எரிச்சல் தரக்கூடியதாகவும் இருக்கக் கூடாது"*

7.16 மேற்கண்ட விதி 17(4)(ஈ)–ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது , மின்குறைதீர்ப்பாளரின் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புகார் ஏதாவது நீதிமன்ற நடவடிக்கையில் நிலுவையிலிருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் உடைய நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ , தீர்ப்போ அல்லது இறுதி ஆணையோ வழங்கியிருந்தாலோ அத்தகைய முறையீட்டினை மி ன்சார குறைதீர்ப்பாளர் ஏற்றுக்கொண்டு தீர்வு வழங்க முடியாது என்று தெரிகிறது

7.17 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் பெயரை பட்டாவில் இணைத்ததற்கு எதிராக திருமதி S. முத்துலட்சுமி அவர்கள் மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்து சொத்துரிமை சம்பந்தமாக வழக்கு விசாரணை தக் க அலுவலரான மாவட்ட வருவாய் அலுவலர் திண்டுக்கல் அவர்களிடம் நிலுவையிலுள்ளது தெரிய வருகிறது . எனவே, மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 17(4)(ஈ) இன் படி மேல்முறையீட்டாளர் பெயர் மாற்றம் மற்றும் இடமாற்றம் கோரும் மின்னிணைப்பு உள்ள இடத்தின் சொத்து உரிமை சம்பந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளதால் மேல்முறையீட்டாளரின் மேல்முறையீடு சம்பந்தமாக தீர்வு வழங்க இயலாது என்பதால் இந்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கூறிய பத்தி 7–ல் உள்ள தீர்வுகளின் படி, மேல்முறையீட்டாளருக்கு எதிராக மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்து சொத்துரிமை சம்பந்தமாக வழக்கு விசாரணை மாவட்ட வருவாய் அலுவலர் திண்டுக்கல் அவர்களிடம் நிலுவையிலுள்ள காரணத்தால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை சம்பந்தமாக தீர்வு காண இயலாது என தெரிவிக்கப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.09/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

பெறுநர்:

1. திரு R.கிரிநாத்,
s/o. ராமசந்திரன்,
தலைவர்,
ஸ்ரீ ரேணுகாதேவி மேல்நிலை பள்ளி,
நெய்காரப்பட்டி, பழனி தாலுக்கா,
திண்டுக்கல் மாவட்டம் – 624625.

2. செயற்பொறியாளர் / பழனி,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், இரயில்வே ஃபீடர்,
பழனி – 624 601.

3. உதவி கணக்கு அலுவலர் / பழனி,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், இரயில்வே ஃபீடர்,
பழனி – 624 601.

4. மேற்பார்வை பொறியாளர், - By Email
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மீனாட்சி நாயக்கன்பட்டி போஸ்ட்,
திண்டுக்கல் -624002.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.